<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் , திருவொற்றியூர்</u>

**<u>OS.No. 247 / 2017</u>**

இந்நீதிமன்றத்து மூன்றாம் நிலை எழுத்தர் திருமதி. அம்பிகா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் 02-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

தேதி - **02.08.2024**

பெயர் - மால்மருகன்

சாட்சி - DW1

விசாரணை தொடங்கும் நேரம் :- **12.35 PM**

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :-

12.03.2017 அன்று ஸ்ரீநிவாச கோவிலின் அப்போதைய தலைவராக வாதி இருந்தபோது கோவிலுக்கு வாதியின் தலைமையில் கும்பாபிஷேகம் நடைப்பெற்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 30.04.2017 அன்று வாதியின் தலைமையில் தான் கோவிலுக்கு மண்டல பூஜை நடைபெற்றது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 16.09.2017 அன்று வாதியின் தலைமையில் தான் கோவிலுக்கு திருப்பதி மற்றும் திருக்குடை ஆகியவை நடைபெற்றது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியுமா என்றாலும் எனக்கு தெரியாது.

08.11.2017 அன்று வாதியின் தலைமையில் சங்கத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 26.11.2017 அன்று 1 ம் பிரதிவாதி வாதியை கலந்தாலோசிக்காமல் சங்கத்தின் பொதுக்குழு ஒன்றை கூட்டியது பற்றி

எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 12.12.2017 அன்று 1 ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் சங்கத்தின் தேர்தல் அறிக்கையினை வெளியிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

ஏற்கனவே இருந்த சங்கத்தினை பற்றியும் அதன் பொறுப்பாளர்கள் பற்றியும் எனக்கு தெரியாது என்று சொன்னால் ஆமாம். ஏற்கனவே இருந்த சங்கத்தின் துணை விதிகள் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் ஆமாம். நான் பொறுப்பாளராக இருந்து நடத்திய சங்கத்தின் தேர்தல் விதிகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் நான் பொறுப்பாளராக இருந்ததில்லை. அந்த தேர்தலில் எந்த நடைமுறைகளிலும் நான் பங்கேற்கவில்லை என்றால் ஆமாம்.

25.12.2017 அன்று நடந்த சங்கத்தின் தேர்தல் செல்லாது என்று சொன்னால் அது எனக்கு சம்மந்தம் இல்லாதது ( மேற்படி கேள்வி குறித்து பிரவாதி தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய ஆட்சேபணையை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபணை யோடு தற்பொழுது இந்த கேள்வி மற்றும் பதில் பதிவு செய்யப்படுகிறது) வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிந்தது.

<u>விசாரணை முடியும் நேரம் :</u>- 12.50 PM